**தலைப்பு 419 – பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 ஏப்ரல் 01 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

---

**ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.**

---

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பபான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) பின்வரும் விடயங்களிலுள்ள வித்தியாசங்களால் நிதிக்கூற்றக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கவில்லை.

**2. நிதிசார் மீளாய்வு**

---

**2.1 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுப்படுத்தப்பட வேண்டியிருப்பினும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கப்பூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச்செல்லப்படுகின்றமை தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்தப்பட வேண்டியதுடன் அம் முறைமையின் பயனுறுதி தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை பயனுள்ளதாக பேணிச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதெனவும், அவ் மீளாய்வுகள் எழுத்துமூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டியபோதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் அறிக்கை கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | வேண்டப்பட்டவாறு மீளாய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரதியை வழங்குவதற்கு இணங்கப்பட்டது. | ஏற்பாடுகளின் பிரகாரம் இணங்க வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றிற்கிடையிலான தொடர்பு.** | **இணங்காமை** | | |
| **(அ)** | 2006 இன் அரச பெறுகை வழிகாட்டிகளின் 4.2.1 மற்றும் 4.2.2 ஆம் வழிகாட்டிகள் | பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகை நேர அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகை வழிகாட்டிகளின் 4.2.1 மற்றும் 4.2.2 ஆம் வழிகாட்டிகளிற்கிணங்க 2022 ஆம் ஆண்டிலிருந்து நடந்து கொள்வதற்கு இணங்கப்பட்டது. | பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகை நேர அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | நிதிப்பிரமாணம் 565 (5) | ஒவ்வொரு மாதத்திற்கும் தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்பு சுருக்கக்கூற்று தொடர்ந்துவரும் மாதம் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டியபோதிலும் அதன்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 565 (5) இன் பிரகாரம் மாதாந்த வைப்பு சுருக்கக்கூற்றினை 2022 ஆம் ஆண்டிலிருந்து அனுப்புவதற்கு இணங்கப்பட்டது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| நிதிப் பிரமாணம் 50 (II) பிரகாரம் மதிப்பீடு முடியுமானவரையில் முழுமையாக சரியாக தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமையாகவிருந்த போதும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமை காரணத்தினால 24 மீண்டுவரும் செலவு விடயங்களின் ஒதுக்கப்பட்ட பணத்தில் 50 சதவீதம் தொடக்கம் 100 சதவீத வீச்சில் மொத்த பெறுமதி ரூபா 58,882,817 ஆன நிதியேற்பாடு குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | நாட்டினுள் காணப்பட்ட கொரோனா பரவலால் அலுவலக வேலைகளை எதிர்பார்க்கப்பட்டவாறு மேற்கொள்ளாமை, இராஜாங்க அமைச்சு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கட்டிடத்தில் தாபிக்கப்பட்டதுடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சால் இராஜாங்க அமைச்சிற்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதும் போன்ற காரணங்களால் மீண்டுவரும் செலவீனங்கள் மீதான செலவீனம் சேமிக்கப்பட்டது. | மதிப்பீடு இயலுமான வரையில் முழுமையாக சரியாக தயாரித்தல் வேண்டும். |

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளில் ஈடுபடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிலுள்ள பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 160,849 ஆக காட்டப்பட்டதுடன் எஸ்ஏ-92 பொறுப்பு கூற்றிலுள்ள பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 304,219 ஆக காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ரூபா 143,370 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | எஸ்ஏ-92 அறிக்கையிலுள்ள பீஓசீ ரவல்ஸ்க்கு செலுத்தவேண்டிய பொறுப்பு ரூபா 178,370 ஆக அறிக்கையில் தவறாக காட்டப்பட்டது. அரச கணக்குகள் திணைக்களம் இது தொடர்பில் 2022 பெப்ரவரி 02 இல் இலத்திரனியல் தபாலினூடாக அறிவிக்கப்பட்டது.<br><br>இணையத்தளத்திற்கு பொறுப்புக்களை ஏற்றிய பின்னர் ரூபா 35,000 பெறுமதியான பற்றுச்சீட்டு தொடர்பில் கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையால் இது எஸ்ஏ 92 அறிக்கையில் இதனை உள்ளடக்க முடிந்திருந்திருக்கவில்லை. | உரிய அறிக்கைகள் உரிய முறையில் பராமரிக்க பேணப்பட வேண்டும். |

**2.5 வங்கி கணக்குகளை செயற்படுத்துதல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டு மாற்றப்பாத ரூபா 262,003 தொகையான 15 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396 (ஈ) இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய செலுத்தனர்களுக்கு தெரிவிப்பதற்கும் கோரப்படாத காசோலைகளை அரச வருமானத்திற்கு சேர்ப்பதற்கும் இணங்கப்பட்டது. | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஒக்தோபர் இல் வங்கியில் வரவு வைக்கப்பட்ட ரூபா 48,258 மீதியை வைப்புச்செய்த நபரினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது வங்கியால் ஏனைய நிறுவன கணக்கிற்கு மேற்கொள்ள வேண்டிய குறிப்பாகும். இதனைத் திருத்துவதற்கு வங்கிக்கு பலதடவைகள் வாய்மூலம் அறிவித்திருந்த போதும் இது திருத்தப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---

**3.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந்திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தப் பாதீடு தொடர்பான முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்டு உரிய ஆண்டின்போது தயாரிக்கப்பட வேண்டியிருந்த வருடாந்த நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.. அதன் | அடுத்த வருடத்தில் வருடாந்த பாதீட்டை கருத்திற்கொணடு முன்னுரிமைகளினை அடிப்படையாகக் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு இணங்கப்பட்டது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

விளைவால், வியாபார மேம்படுத்தல்களை ஒருங்கிணைத்தல், வெளிநாட்டு நேரடி முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா ஊக்குவிப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் பிராந்திய உறவு மேம்படுத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அமைச்சால் ரூபா 75,810,700 மொத்தச் செலவீனம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அடையப்பட்ட முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு இயலாதிருந்தது.

## 3.2 வருடாந்த செயன்முன்னேற்ற அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க பொது நிதிச்சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் பொது நிதித் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த கணக்குகளுடன் வருடாந்த செயன்முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு இணங்கப்பட்டது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 (1) உறுப்புரை மற்றும் 40 (2) (1) உறுப்புரை பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அவ் இராஜாங்க அமைச்சின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக பொருத்தமான கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளரை உள்ளடக்கிய உத்தியோகத்தரினை சேர்ப்பதற்காக நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கான பதில் இதுவரை கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினர் 23 ஆக காணப்படினும் உள்ளவாரான பதவியணியினர் 16 ஆக காணப்பட்டமையால் 07 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. | இப்போது நிறைவேற்றுத்தரத்திலுள்ள தற்போதுள்ள பதவிகள் மற்றும் இரண்டாந்தர மட்டத்திலுள்ள தற்போதுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புப்பதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் ஏற்கனவே முடிவடைந்தது என இணங்கப்பட்டது. | தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |